## சுருக்கம்

மோட்டார் வாகனம் – விருதுநகர் மாவட்டம் – அரசு மருத்துவமனை வாகனம் டி.என் 09ஜி 1849 வாகனம் 29.01.2010 அன்று விபத்துக்குள்ளானது – இழப்பீட்டுத் தொகை வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி–1) துறை

அரசாணை (2 பத்தாண்டு) எண்: 62

நாள்: 16 .07. 2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய – ஆனி 32

படிக்கப்பட்டது:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அவர்களின் கடிதம் ந.க. எண். 07121/அந–2/1/2010, நாள்: 19.11.2013.

------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அவர்கள் 29.01.2010 அன்று அரசு அவசர ஊர்தி எண் டி.என் 09ஜி 1849ல் மேல் சிகிச்சைக்காக திரு.கதிர்வேல் என்ற நோயாளியை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு திரும்ப வரும் பொழுது T.கல்லுப்பட்டி பேருந்து நிலையம் அருகில் திரு.அழகுமலை என்பவர் மீது மோதி விபத்துக்கு உள்ளானதில் திரு.அழகுமலை சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். இதனால் திரு.அழகுமலை என்பவரது வாரிசுதாரர்கள் விருதுநகர் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத்தொகை கூடுதல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததில் ரூ 2,81,000/–ஐ 7.5 சதவீகித வட்டியுடன் சேர்த்து மனுதாக்கல் செய்த நாளிலிருந்து பைசலாகும் காலம் வரைக்கும் கணக்கீடு செய்து வழங்க வேண்டும் என்று நீதிமன்ற தீர்ப்புரையில் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது என்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், அரசு மருத்துவமனை வாகனம் எண் டி.என் 09ஜி 1849 விபத்துள்ளானதைத் தொடர்ந்த வழக்கு எண் MCOP எண் 144/2010–ல் நீதிமன்ற தீர்ப்பின்படி இழப்பீட்டுத் தொகை ரூ 2,81,000/– 7.5% சதவீகித வட்டியுடன் ரூ 3,66,939/– (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி ஒன்பது மட்டும்) 18.09.2010 முதல் 30.06.2014 வரை கீழ்க்கண்டவாறு

..2.

கணக்கிட்டு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநருக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| இழப்பீட்டுத் தொகை | – | | ரூ2,81,000.00 |
| வருடாந்திர வட்டி விகிதம் | – | | 7.5% |
| 18.09.2010 முதல் 30.09.2010 வரை | – | | 13 நாட்கள் |
| 1.10.2010 முதல் 30.06.2014 வரை உள்ள மொத்த காலம் | | | 45 மாதங்கள் |
| வட்டி | – | | அசல் X காலம் X வட்டி விகிதம் |
| ஒரு மாதத்திற்கு வட்டி | – | ரூ 2,81,000 x 1/12 x 7.5/100<br>= ரூ 1,756.25 | |
| 18.09.2010 முதல் 30.09.2013 வரை 13 நாட்களுக்கான வட்டி | | ரூ 1,756.25 x 13 =ரூ 736.4<br>31 | |
| 1.10.2010 முதல் 30.06.2014 வரை 45 மாதங்களுக்கான வட்டி | | | ரூ 1,756 x 45 =ரூ 79,020.00 |
| தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீடு தொகை | | ரூ<br>ரூ<br>ரூ | 2,81,000.00<br>736.00<br>79,020.00 |
| | – | | ரூ 3,60,756.00 |
| தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீடு தொகை | | | ரூ 3,60,756.00 |
| தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு நீதிமன்ற கட்டணம் | | ரூ | 2,183.00 |
| தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்கறிஞர் கட்டணம் | | ரூ | 4,000.00 |
| மொத்தம் | | | ரூ 3,66,939/– |
| (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி ஒன்பது மட்டும்) | | | |

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2210–மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – ஆங்கிலமுறை மருத்துவம் – 110 மருத்துவமனைகளும், மருந்தகங்களும் I திட்டத்தில் சேராதது – AB வட்ட தலைமையிட மருத்துவமனைகள் – 51 இழப்பீடு – 02. ஏனைய இழப்பீடுகள்" (சாட்டியது)
( த.தொ.கு.2210–01–110–AB–5127)

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2014–2015ம் ஆண்டு திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும், அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் 2014–2015ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீடு நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சுகாதாரம்–II) துறைக்கு அனுப்பும் பொழுது இத்தொகையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இதுபோன்ற கருத்துருவில் ஏற்படும் காலதாமதத்தால் அரசுக்கு கூடுதல் செலவினங்களைத் தவிர்க்கும் வகையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.32824/சுகாதாரம்– II / 2014 நாள் 02.07.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.642 (அறுநூற்று நாற்பத்திரண்டு) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–6.
இணை இயக்குநர் நலப்பணிகள், விருதுநகர்.
மாநிலக்கணக்காயர், சென்னை–18/35
மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர்.

<u>நகல்:</u>
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலைநேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
உள் (போ. வ ) துறை, சென்னை–நிதித் (வ.செ. பொது–2 / சுகாதாரம் – II) துறை,
சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை, சென்னை–09.
இருப்பு கோப்பு / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/7/14

பிரிவு அலுவலர்.

17/7/14